1970 மார்ச் 5]

மாயூரம் வட்டம் கூட்டுறவு விற்பனேச் சங்கம்

* 224 வினு—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுக்கா கூட்டுறவு விற்பனேச் சங்கத்தில் 1968-ஆம் ஆண்டு காரியதரிசியாக இருந்த ஒருவர் ரூ. 5,000 (ஐயாயிரம்) கையாடல் செய்ததாகப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதுபற்றி அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: (அ) ஆம்.

(இ) இது காவல் துறையின் விசாரணேயிலுள்ளது.

திரு. என். கிட்டப்பா: அந்தக் காரியதரிசி யார் என்பதையும், மாயூரம் விற்பனேச் சங்கத்தில் செய்துள்ளதாகக் கூறப்படும் மோசடிகளேயும், அரசாங்கம் முற்பட்டு எடுத்துள்ள நடவடிக்கைகளேயும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: அங்குள்ள கூட்டுறவுத் துறையின் துணைப் பதிவாளர் மூகம்மது யூசுப் என்ற பெயருள்ளவர். 1967-ம் ஆண்டில், ஐயாயிரம் ரூபாய் கணக்கில் எழுதியிருக்கிறது, கும்பகோணம் பாங்கில் கொடுத்ததாக. கும்பகோணம் பாங்கில் அது வரவில்லே, பணத்திற்கு ஏதோ ஆகியிருக்கிறது என்ற அளவில் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு 8—12—1969 அன்று போலீசில் கூட்டுறவுத் துறை மேலதிகாரிகள் புகார் செய்திருக்கிறுர்கள். போலீஸ் மேல் நடவடிக்கை என்ன என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் புலன் விசாரணே செய்து கொண்டிருக்கிறுர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலேவர்: மாயூரம் தாலுகா கூட்டுறவு விற்பனேச் சங்கத்தைப் பற்றிய கேள்வி மட்டுமே கேட்க வேண்டும்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: இப்பேர்ப்பட்ட கையாடல் மாயூரம் போன்ற பல இடங்களில் நடைபெறுகின்றன. இதை அறவே தடுத்து நிறுத்த சட்ட விதிகளில் மாற்றம் செய்வதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: சட்ட விதிகளில் மாற்றம் செய்வதன் மூலம் இப்படிப்பட்ட தவறுதல்களேச் சீர்திருத்தி விட முடியாது. பொதுமக்களுடைய கருத்தும் இதற்குச் சாதகமாக வளரவேண்டும். இதற்கிடையில், போலீசில் அதிக நாட்கள் இப்படிப்பட்ட வழக்குகள் காலதாமதம் ஆகாமல் இருப்பதற்காக தனியாக இதற்கென்று ஒரு போலீஸ் பிரிவை உண்டாக்க முடியுமா என்பது செயற்குறிப்பில் இருக்கிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: போலீசில் புகார் செய்த பிறகு சம்பந்தப்பட்ட நபரைப் போலீஸ் கைது செய்ததா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: போலீசில் புகார் செய்த உடனே கைது செய்துவிட மாட்டார்கள். புலன் விசாரணை செய்து, அதற்குப் பிறகு சரியான வழக்கு இருக்கிறது என்று கண்டுபிடித்து, அதற்குப் பிறகுதான் கைது செய்து வழக்கு தொடரப்படும்.

Thiru R. PONNAPPA NADAR: Sir, may I know why there is delay in charge-sheeting the case?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: 8—12—1969 அன்று புகார் செய்யப்பட்டது. இரண்டு மூன்று மாதங்கள்தான் ஆகியிருக்கின்றன. புலன் விசாரணை செய்த பிறகுதான் வழக்கு பதிவு செய்யப்படும். அவசரமாக வழக்குப் பதிவு செய்து சாதகமாக இல்லாமல் போய்விடுமானால் நிரபராதியைக் குற்றம் சாட்டி விட்டார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லக்கூடும். நன்றாக புலன் விசாரணை செய்து, வேண்டிய சாட்சியங்களைத் தீர்க்கமாக ஆராய்ந்து அதற்குப் பிறகு வழக்கைத் தொடருவார்கள்.

திரு. கே. பி. எஸ். மணி: போலீசுக்குப் புகார் செய்வதற்கு முன்னால் டிப்பார்ட்மென்ட் அதிகாரிகள் தவறு நடந்திருக்கிறது என்பதை உறுதி செய்து கொண்ட பிறகுதான் போலீசுக்குப் புகார் செய்கிறார்கள். அப்படி இருக்க, பொதுவாக கூட்டுறவுச் சங்கத்தின் கேஸ்கள் எது கொடுக்கப்பட்டாலும் காலதாமதமாவதற்குக் காரணம் என்ன? இப்படி துரிதமாக நடவடிக்கை எடுக்காததன் காரணமாகத்தான் இப்படிப்பட்ட [redacted]*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: [redacted]*[redacted] என்று சொன்னது நீக்கப்படுகிறது. பத்திரிகைகளிலும் போட வேண்டாம். *[redacted] என்ற வார்த்தையை இந்த முறையில் உபயோகப் படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி: கும்பகோணம் பாங்கில் ஏற்பட்ட இந்த மோசடி வழக்கில் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கூடியவரையில் துரிதமாகவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அரசாங்க ஊழியர் மீது தகுந்த முகாந்தரம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்படுமானால், அரசாங்க ஊழியர் தவறான குற்றம் சாட்டப்பட்டு, தொந்தரவுக்கு உள்ளாக்கப்பட்டார் என்ற குற்றச்சாட்டு வரக்கூடும். இப்படிப்பட்ட புகார்கள் மீது கூட்டுறவுத் துறை அதிகாரியே முதலில் விசாரணை செய்கிறார்கள். நான் சொன்னபடி இந்தபாங்கில் போட்டதாகச் சொல்லப்பட்ட ஐயாயிரம் ரூபாய் வழக்கைத் தவிர, மேலும் நாலைந்து குற்றங்கள் இருப்பதாகத் தோன்றுகிறது. போலீசார் மேலும் புலன் விசாரணை செய்து வழக்குத் தொடருவார்கள்.

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1970 மார்ச் 5]

திரு. என். கிட்டப்பா : இம்மாதிரி நிலைமைகள் மாயூரத்தில் மட்டுமல்லாது மாநிலம் பூராவும் பல இடங்களில் கூட்டுறவுத் துறையில் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட மோசடிகளிலே ஈடுபடுகின்றவர்களுக்கு அதிகமான தண்டனை கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : கூட்டுறவுச் சங்கங்களில், மாயூரத்தில் மட்டுமல்லாது, தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்லாது, பல மாவட்டங்களிலும் தவறுகள் நடைபெறுகின்றன என்பதைத் தெரிந்து, கூட்டுறவுத் துறை அதிகாரிகளைச் சற்று அதிகப்படுத்தியிருக்கிறோம். முன்னல் தமிழ்நாடு ஐந்து வட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இப்போது இன்னும் இரண்டு கூட்டுப் பதிவாளர் (ஜாயின்ட் ரிஜிஸ்ட்ரார்) அதிகமாக நியமிக்கப்பட்டு, மேலும் நன்ருகக் கண்காணித்து வரும் அளவுக்கு ஐந்து வட்டங்களாக இருந்தது ஏழாகப் பெருக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். திரு. கே. பி. எஸ். மணி அவர்கள் கேள்வி கேட்கும்போது என்று குறிப்பிட்டார்கள். அதை நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே சொல்லியாகிவிட்டது. பத்திரிகை நிருபர்கள் பக்கம் பார்த்துச் சொல்லிவிட்டேன். எப்படியும் நீங்கள் கேட்டது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. ப. மகாதேவன் : சட்டசபைக் குறிப்புகளில் நீக்கும்படியான * என்பது கன்னித் தமிழும் கவின் மலையாளமும் கொண்ட பகுதியிலிருந்து வந்த எனக்குப் புரியாததால் அதற்கு அர்த்தம் என்ன என்று விளக்குவார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியே போய் விளக்கிக் கொள்ளலாம்.

திரு. மு. கந்தசாமி படையாச்சி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் எல்லாம் கேள்வி நேரம் முடிந்த பிறகு கேளுங்கள்.

நேமூர் கூட்டுறவு விவசாய வங்கி

■225 வின—**திரு. மு. இராமன் :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) நேமூர் கூட்டுறவு விவசாய வங்கியில் நிதியைக் கையாடல் செய்திருப்பதாகப் புகார் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்துள்ளதா ?

---

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.